# ஏன் இந்த
# மெத்தனம்?

சாலை இளந்திரையன்

அறிவியக்கப் பேரவை

# ஏன் இந்த மெத்தனம்?

முனைவர்

சாலை இளந்திரையன்

அறிவியக்கப் பேரவை

புதுப்பெருங்களத்தூர் : சென்னை-63

முதற் பதிப்பு : செப்டம்பர் 1976
உரிமை : அறிவியக்கப் பேரவை

விலை 50 காசு

---

**YEN INDHA METHTHANAM?**

(Why this Indifference?)

By

DR. SAALAI ILANTHIRAIAN
Department of M. I. L.
Delhi University, DELHI-

---

Published by:

ARIVIYAKKA PERAVAI
MADRAS - 600 063

---

அச்சிட்டோர்: அறிவானந்தர் அச்சகம், குடந்தை 612 001

# அறிவிய நறும்பணி

மதச்சார்பற்ற தன்மை என்னும் அறிவியச் சிந்தனைத் தடத்தை வலுப்படுத்தும் பணியிலே அறிவியக்கப் பேரவை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அதன் எழுத்துப் பணி, சிந்தனை மலர்கள் என்னும் துண்டு வெளியீடுகளாக முளைவிட்டது; அறிவு விளக்க மடிப்புகளாகத் தளிர்த்தது; சிந்தனையைச் சாணை பிடிக்கும் 'நஞ்சருக்குப் பஞ்சணையோ', 'நம்மைப் பற்றிய சிந்தனைகள்,' 'காலத்தின் கேள்விகள்' என்னும் கருத்துக்குறுநூல்களாக வளர்ந்தது; கடந்த ஓராண்டுக் காலமாக,-(1975 அக்டோபர் முதல்), ''அறிவியக்கம்'' என்னும் மாத இதழாகப் பூத்துக் குலுங்கிப் பொலிவு காட்டுகிறது. இதோ, அய்ந்து கட்டுரைகளைக் கொண்ட இந்தப் புத்தகத்தின் மூலம், பேரவையின் குறுநூல் வெளியீடு மீண்டும் தொடங்குகிறது.

அறிவியம் ('செக்குலரிசம்') என்னும் கோட்பாடு அறிவுவளம், பொதுமை நலம் என்னும் இரண்டு கால்களில் நடக்கிறது. அதை வளர்த்து உறுதிப் படுத்த நடக்கின்ற பேரவையின் பணிகளிலும், இந்த இரட்டை ஊட்டமே முதன்மை பெறுகிறது. நாட்டு நிலையையும் அதற்குக் காரணமான நமது மக்களின் மன நிலையையும் சுட்டிக் காட்டி, அவைகளிலிருந்து விடுபட்டு ஒரு புதிய சமுதாய அமைப்பிற்கு வருமாறு அவர்களை அழைக்கின்றன இந்தக் கட்டுரைகள். இவைகளை மக்களிடையே பரப்பி உதவுமாறு அன்பர்களை வேண்டுவதுடன், இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகளை வெளியிட்டு உதவிய திருவிடம், பொள்ளாச்சிவாசி, தென்குரல் ஆகிய இதழ்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

புதுப்பெருங்களத்தூர் — அமைப்பாளர்
சென்னை — 600 063 — **அறிவியக்கப் பேரவை**

# சாலையின் நூல்கள்

## கவிதை :

இளந்திரையன் கவிதைகள்
அன்னை நீ ஆட வேண்டும்
சிலம்பின் சிறுநகை
காலநதி தீரத்திலே...
பூத்தது மானுடம்
கொட்டியும் ஆம்பலும்...
வீறுகள் ஆயிரம்
நஞ்சருக்குப் பஞ்சணையோ ?
நடைகொண்ட படை வேழம்

## திறனாய்வு :

புரட்சிக்கவிஞர் கவிதைவளம்
புதிய தமிழ்க் கவிதை
தமிழில் சிறுகதை
சிறுகதைச் செல்வம்
புதுத்தமிழ் முன்னோடிகள்
சமுதாய நோக்கு
புதுத் தமிழ் முதல்வர்கள்
சமுதாய நோக்கில் பழமொழிகள்

## கட்டுரை :

சிந்தனைக்கு...
உலகம் ஒரு குடும்பம்
உலகத் தமிழ்
தமிழுக்காக...
கூட்டின் அமைதி குலைகிறது
நம்மைப் பற்றிய சிந்தனைகள்
காலத்தின் கேள்விகள்
தமிழ் மாநாடு
எங்கள் பயணங்கள்
ஏன் இந்த மெத்தனம் ?
உரைவீச்சு

# 1 தேட ஒருவன், தின்ன ஒருவனா?

நான் நடுநிலைப் பள்ளியில் சேர்ந்தபோது இந்தியத் தேசீயக் காங்கிரஸ் என்னும் இயக்கம் ஒன்று இருந்துவந்ததே எனக்குத் தெரியாது. நாட்டுக்குச் சுதந்திரம் என்ற எண்ண அலைகளே எங்கள் சிற்றூரில் வந்து எட்டியதில்லை. அவ்வளவு அப்பாவியாக இருந்த நான் பள்ளி இறுதி (எஸ். எஸ். எல். சி.)த் தேர்வு எழுது வதற்கு முன்பே,–''தேசீய நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்ட குற்றத்துக்காக''ப் பள்ளி விடுதியிலிருந்தே வெளியேற்றப்பட்டேன்.!

## எங்கள் வளர்ச்சி

தீவிரமான இந்த மாறுதலையும் வளர்ச்சியையும், இந்திய விடுதலை இயக்கம், எனக்குள்ளும் என்னைப் போன்ற பல இளைஞர்களுக்குள்ளும் விரைவிலேயே உண்டாக்கி வளர்த்தது. ''ஆளும் வளரணும் அறிவும் வளரணும் – அதுதாண்டா வளர்ச்சி'' என்றான் பட்டுக் கோட்டைக் கவிஞன். அசுத்தமான கிராமங்களிலும் அளவற்ற வறுமையிலும் வாழ்ந்த இளைஞர்களாகிய நாங்கள்,–ஆள் வளர்ச்சியில் எப்படி இருந்தாலும்,–அறிவு வளர்ச்சியில்,– தேசீய ஆர்வ வளர்ச்சியில் வியத்தகு விரைவு காட்டினோம்.

அப்படி நாங்கள் துள்ளித் தாண்டி வளர்ந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? எங்களின் சிற்றூர் எல்லையைத்தாண்டி வெளிக்காற்றைச் சுவாசிக்கத் தொடங்கியதுமே,—எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் நாட்டு விடுதலையைச் சார்ந்தே அமையப் போகின்றன என்ற எண்ணம் எங்கள் நெஞ்சில் வலுவாக ஏற்பட்டுவிட்டது. நாங்கள் பார்த்த சமுதாய ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார மேடுபள்ளங்கள், தனிமனித வஞ்சனை சூதுகள்—அனைத்துக்கும் அந்நிய ஆட்சியே காரணம் என்ற ஓர் எண்ணம் எங்கள் இதயத்தில் மட்டுமல்ல, எங்கள் உடலெங்கும் ஓடும் குருதியிலேயே கலந்து ஓடிக் கொண்டிருந்தது. சுதந்திரம் வந்துவிட்டால், இந்தக் கேடுகள் அனைத்தும்,— கதிரோனை எதிர்ப்பட்ட பனித் துளிகள்போல் இறந்தொழிந்து மறைய,—எங்கள் நாடு மாமனிதர்களை மட்டுமே கொண்டதோர் இனிய பெரிய குடும்பமாக உருக்கொண்டுவிடும் என்று நாங்கள் மனமார நம்பினோம்.

1947 ஆகஸ்டு 15-ல் நாட்டுக்கு விடுதலை என்ற செய்தி வந்ததும் நாங்களெல்லாம் துள்ளிய துள்ளளையும் குதித்த குதிகளையும் வருணிக்க இயலாது! எங்கள் இன்ப நன்னாளின் அதிகாலை விடிந்துவிட்டது அல்லவா?..

## பட்டினிப் பிடியில்..

நாள் ஆக ஆகத்தான்,— நமது சுதந்திரத்துக்கு வயது இரண்டு, மூன்று, பத்து, பதினைந்து, இருபது என்று ஏற ஏறத்தான்,—எங்கள் ஆர்வம் தளரத்தொடங்கியது; 'நாம் ஏதேதோ எண்ணியிருந்தோம்,— இப்போது வேறு ஏதோ நடக்கிறதே!' என்று எங்கள் இதயம் குழம்பியது...

நாட்டிலே மாபெரும் தேசீயத் தலைவர்கள் இருந்தார்கள்; விடுதலைப்போரில் முன்நின்ற அவர்களின்

தூய இதயம், அளவிறந்த ஆர்வத்தோடுதான் செயலாற்றியது: திட்டங்களை வகுத்தார்கள்; வெளிநாட்டில் கடன்களை வாங்கினார்கள். ஆறுகள் மறிக்கப்பட்டன; உலைகளில் அனல்நாக்கு நிமிர்ந்தது. கல்விக்குத் திட்டம், கலைகளுக்குப் பரிசு, விவசாய வளர்ச்சி என்று என்னென்னவோ நாடெங்கும் நடந்தவண்ணமாகவே இருந்தன..

ஆனாலும், என் போன்ற ஏழை, எளிய ஒதுக்கப்பட்டவர்கள், எங்கிருந்து வந்தோமோ அந்த இருட்குகை,- ஏழை எளியவர்களையே உற்பத்தி செய்யும் ஒதுக்கிடம் இன்னமும் இருந்துகொண்டேதான் இருந்தது:

*காவியம் பாடிய மண்ணினிலே-பல*
*கற்பனை பொங்கிய பூமியிலே*
*பாவிகளே, பசிபட்டினியைப் -பல*
*பாத்திகள் கட்டி வளர்ப்பதுவோ?*

என்றுதான்,- சுதந்திரம் பெற்றுப் பல ஆண்டுகளுக்குப் பிறகும்,- நாங்கள் பாடவேண்டிய நிலை இருந்தது!

'இப்போது எல்லாரும் கோயிலுக்குள் போகிறோமே; பட்டினிச்சாவு குறைந்திருக்கிறதே; சுயமரியாதைத் திருமணம் செல்லும் என்று சட்டம் செய்துவிட்டோமே; வங்கிகளை நாட்டுடமை ஆக்கிவிட்டோமே; பலருக்குக் கல்வி கொடுத்திருக்கிறோமே; அழகான தார்ச்சாலைகளைப் பல ஊர்களுக்குப் போட்டிருக்கிறோமே; நாட்டின் பல கிராமங்களுக்கு மின்விளக்குப் போட்டுள்ளோமே; குடிசைமாற்று வாரியம் கண்டிருக்கிறோமே; குடிநீர் வழங்கத் திட்டமிட்டுவிட்டோமே.....?'

இப்படிப் பலவற்றைப் பலர் அடுக்குகிறார்கள்; இவைகளை எல்லாம், நாங்கள், சாதனைகளல்ல என்று மறுக்கவில்லை. என்றாலும், நாட்டு மக்களில் 40

சதவீதத்தினர் இன்னமும் பட்டினி எல்லையில் கிடக்கிறார்கள் என்றுதானே நமது தேசீயப் புள்ளி விவரம் சொல்லுகிறது! அதுகூடப் பெரிதில்லை;- அவர்கள் பட்டினி எல்லையிலிருந்து எப்போது மீள்வார்கள் என்பதே, நம்மில் யாருக்கும் இன்னமும் தெரியவில்லையே..!

"மனிதனுக்கு முதல் இன்பம் பசியாறும் இன்பம்" என்பதே இந்நாட்டு எளியோராகிய எங்களின் பாட்டு; எங்களின் பாட்டுமட்டும் அல்ல,- எங்கள் அன்றாட அனுபவம் அது! அந்த இன்பம் எங்கள் வாழ்வில் இன்னும் அவ்வப்போதுகூட ஏற்படவில்லையே என்ற ஏக்கம்,–40 சதவீதம் மட்டுமல்ல, அதற்கும் மேம்பட்ட தொகையினரான மக்களை வாட்டிக்கொண்டு இருக்கிறதே!

## தப்புக் கணக்கோ?

பசி மட்டுமா இங்கே குடிகொண்டு இருக்கிறது? வாழ்வின் உயர்நெறிகளே சரிந்துகொண்டு இருக்கின்றனவே! குற்றம் செய்தவன்,–அந்நிய ஆட்சிக்காலத்திலே கூட,–தன் குற்றத்தை எண்ணி வெட்கினான்; நாணிக் கோணி, கூனிக் குறுகி நின்றான். இப்போதோ? "அவன் குற்றம் செய்யவில்லையோ?" என்று எதிரியைச் சுட்டிக்காட்டி, தன் குற்றத்தை நியாயம் என்று நிலை நாட்ட முயல்கிறவன் அல்லவா, அடிமுதல் முடிவரையில் ஏறிக்கிடக்கிறான்!..

எங்கள் அறியாமையை, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிப் பெருமக்களின் முன்னால் வெட்கமின்றி ஒப்புக்கொள்கின்றோம்: நாட்டுக்குச் சுதந்திரம் வந்தால், அங்கே குற்றவாளிகளே இருக்கமாட்டார்கள் என்று நாங்கள் எண்ணினோம். "பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான்;-பொதுவுடைமையோன் திருட்டைக்

களைவிக்கின்றான்!'' என்று கவிஞர் பாடினார் அல்லவா? அதுபோல, நாங்களும்,-''அந்நிய ஆட்சி குற்றவாளிகளை உருவாக்குகிறது,-நமது ஆட்சி, குற்றம் செய்யும் மனப் மனப்பாங்கையே அடியோடு கல்லி எறிந்துவிடும்'' என்று உளமார நம்பினோம்.

இப்போது சந்தேகமாக இருக்கிறது; 'உண்மையில் நாட்டுக்கு இன்னும் சுதந்திரம் வரவில்லையா? அல்லது, சுதந்திரத்தின் ஆற்றலைப்பற்றி நாங்கள் போட்டிருந்தது தான் தப்புக்கணக்கா?..'

## புலிகள், புலிகள்!

இன்னொன்றையும் உங்களிடம் சொல்லிவிடு கிறேன்: நாங்கள் சுதந்திரப் போரணியிலே திரண்ட போது, இந்தியச் சாதியே எளியவன், வலியவன் என்ற இரண்டு சாதிகளாகப் பிரிந்து நின்றது: வலியவன் அதட்டினான்; எளியவன் அடங்கினான். வலியவன் நிமிர்ந்து திரிந்தான்; எளியவன் ஒதுங்கிப் பதுங்கிக் கிடந்தான். வலியவன், 'நானே ராஜா!' என்று எம்பிக் குதித்தான்; எளியவர்கள், 'நாங்களும் இந்த மண்ணில் பிறந்து வாழநேர்ந்ததே!' என்று வெம்பிச் சாம்பினார்கள்.

இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வந்தால், - புலியும் மானும் ஒரு துறையிலே நீர் அருந்தாவிட்டாலும், - புலியை நினைத்தே மான்கள் நடுங்கிப்பதறும் நிலை இராது என்று எண்ணினோம்; புலிகள் தங்கள் வயிற்றுக்கு இரையடிக்கும் என்றாலும்,- வீணே கொன்று கிழித்தெறியும் இரத்த வெறியையாவது அவை விட்டு விடும் என்று நம்பினோம். ஆனால் நடந்தது என்ன? முதுகளத்தூர் வெடித்தது,- வெண்மணியாய் விரிந்தது;- 1974 சூன் 13ல், மத்தியப் பிரதேசப் பரோலிகபுரமாக எரிந்தது; அது, இன்னமும் அங்கங்கே தொடர்கிறது!...

'150 ஆண்டு அந்நிய ஆட்சியால் எங்கள் தமிழனின், எங்கள் இந்தியனின் உள்ளம் கடுகுபோல் சிறுத்துப் போய்விட்டது;-சுதந்திரம் வந்துவிட்டால், உலகத்தின் 200 கோடி மக்களையும் ஒரே குடும்பமாகக் காணும் பெரிய உள்ளம், தாயுள்ளம் எங்களிடம் மீண்டுவரும்' என்று ஆசையோடு நம்பினோம். ஆனால், அந்தோ! அண்டை வீட்டுக்காரனுடனும் இணங்கி இனம்பொருந்தி வாழக்கூட முடியாதவர்களாகி நிற்கிறோம்!

## எறும்புப் புற்றிலே தேன்!

நாட்டு விடுதலையோடேயே உயர்வுகளெல்லாம் வந்துவிடும் என்று நாங்கள் நினைத்ததுதான் தவறோ? அப்படி எண்ணியதாலேதான், இங்கே வகுத்து நிறை வேற்றப்பட்ட திட்டங்கள் சிலரைச் செழிப்பித்தும் பலரை நலிவித்தும் வந்ததைக் கவனிக்காமல் இருந்து விட்டோமோ? சுதந்திரம் என்ற பெரிய இலட்சியத்தைப் பற்றி நாங்கள் ஒருவிதமாகக் கனவு கண்டுகொண்டு இருந்ததுபோலவே, - வேறு சிலர், வேறுவிதமாகத் திட்ட மிட்டுக்கொண்டு இருந்தார்களோ? அவர்களின் திட்டம் தான், கடந்த 28 ஆண்டுகளாக நாட்டிலே செயல்பட்டு வந்திருக்கிறதோ? அதை உணராமல்,- "சுதந்திரச் சூரியன் தன் செங்கதிர்களோடு உதித்துவிட்டால் சின்னத் தனமும் சிறுமைத்தனமும் பனிபோல் நீங்கிப்போகும்;- இங்கே சிறுமைகளே தலை எடுக்கமாட்டா!" என்று நாங்கள் நினைத்ததுதான் தவறோ?

இருக்கலாம்தானே? நாங்கள் மட்டும் தவறு செய் திருக்கமுடியாதா, என்ன? சுதந்திரம் என்பதற்கு (அதை இழந்திருந்த காரணத்தால்) நாங்கள் அதீதமுக்கியத்துவம் கொடுத்துவிட்டதால், அதன்நிழலிலும் செழிக்கக்கூடிய களைகளை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வில்லை என்றுதான் தோன்றுகிறது. சுதந்திரத்தைப் பெற்ற நாங்கள், அதைத் தலைமாட்டில் வைத்துவிட்டு

உறங்கிவிட்டதால், யார் யாரோ அதைத் திருடிப் புசித்து அதன் பயனைத் தமதாக்கிக்கொண்டார்கள் என்று தெரிகிறது.

சுதந்திரத்தைப் போராடிப்பெற்ற நாங்கள், அதைப் பேணிக்காத்துப் பயன்கொள்ளும் போராட்டத்தில் தோற்றுவிட்டோம் என்பதே உண்மை. ஈயாரைத் தீ கொண்டு விரட்டித் தேன் எடுத்தோம்; அதை எறும்புப் புற்றிலே வைத்துவிட்டு உறங்கிவிட்டோம். அதை எறும்பு அருந்தித் தீர்த்துவிட்டதுஎன்றால், அது எறும்பின் குற்றம்ஆகுமா? எறும்பு எதைஎதையோ தின்று ஜீவிக்கிற பிராணிதான். ஆனால், ஏமாந்த சோணகிரிகள் தாங்கள் எடுத்த இனிய தேனை அதன் வாயிலேகொண்டுபோய்க் கொடுத்தால், அது, வேண்டாம் என்று சொல்லுமா?

## வெற்றி வேண்டுமா ?

ஒரு முனையில் வென்றோம்; மறுமுனையில் தோற்றோம். அதாவது, அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதில் வெற்றி அடைந்தோம்; அதைச்சரியாகப் பயன்படுத்தும் பணியில் அப்பட்டமாகத் தோல்வியடைந்துள்ளோம். இந்தத் தோல்வியை வெற்றியாக மலர்விக்க வேண்டுமானால், எறும்புகளை நசுக்கி நமது தேன்கூட்டை விடுவிக்கவேண்டும்; எலிகளைப் பொறிவைத்து மாட்டி, நமது பயிர் வகைகளை மீட்க வேண்டும். ஊற்றைவாயன் தேடத்தேடக் கப்பரைவாயன் தின்று தீர்த்த கதை,- (ஒருவன் பல் துலக்கவும் நேரமின்றி உழைத்து உழைத்துச் சேர்ப்பதை, மற்றொருவன், என்றும் நிறையவே நிறையாத தன் வயிற்றிலே தள்ளிக் கொண்டே இருக்கின்ற கதை) முற்றுப் பெறவேண்டும். இதற்கு முதற்படியாக, நமது பொறுமைத்தனமும் பொறுப்பின்மைத்தனமும் கழலவேண்டும்; கடுமைத்தனமும் கரிசனத்தனமும் நமது தலைகளிலே குடியேறவேண்டும்!

# 2 துப்புரவுப் பணியா, சப்பாணி நடையா?

சில ஆண்டுகளுக்கு முன்பு, ''அரசியல்வாதிகளுச்குப் பள்ளிகள் தேவை'' என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தேன்: '' நமது சட்டமன்ற, சட்டமேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருகின்றவர்களிலே பலருக்கு அரசியல் என்றால் என்ன என்ற அடிப்படையே தெரியவில்லை. தெரியவில்லையாகவே, அரசியல் நடைபெற வேண்டிய இடத்திலும் நேரத்திலும், இங்கே அர்த்தமில்லாத ஏதேதோ நடைபெறுகிறது. இதனால் மக்களின் வரிப்பணமும் பல நல்லவர்களின் பொன்னான நேரமும் வீணாவதோடு, மக்களின் வாழ்வே பின்தங்கிப்போகிறது, இந்த மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகாவது இவர்களுக்கென்று ஓர் அரசியல் பள்ளியை அமைத்து. அடிப்படை அரசியலை (குறிப்பாக, மக்கள்நாயக நடைமுறைகளை) இவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும்..'' இப்படி அந்தக் கட்டுரையில் சொல்லியிருந்தேன்.

## சாலை சிரிக்கிறது!

சில ஆண்டுகளுக்குப் பிறகு, — இப்போது, (1976ல்) நின்று நிதானித்துப் பார்க்கையில், ''மக்கள்நாயக அரசியல் மட்டுமல்ல, புதுக்காலத்துக்கு ஏற்ற நடைமுறை எதுவுமே நமக்குத் தெரியவில்லை'' என்றே வாடிக்

கிறங்க வேண்டியுள்ளது. அரசியல் என்பதன் பேரால் என்னவோ நடக்கிறதே என்று மருண்டு நிற்கிற நமது கண்ணெதிரே நடக்கின்ற ஒவ்வொன்றிலுமே இந்த முரண்பாடு தெரிகிறது!

பட்டணங்களிலே உள்ள அழகிய தார்ச் சாலை பேருந்து, சரக்குந்து, சீறுந்து, கரட்டுந்து, கையுந்து, மிதியுந்து என்னும் பலவகையான வண்டிகளுக்காகப் போடப் பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சாலையில், இவைகளை முந்திக்கொண்டு, எருமைக் கூட்டமே, சினிமாப் பெண்கள் போல் உல்லாச நடை பயில்கிறது! எத்தனை முறை ஆரண் அடித்துச் சங்கு ஊதினாலும் அவை விலகுவதில்லை. எருமைகளை விலக்கி, அவைகளுக்கு உரிய தடத்தில் அவைகளைச் செலுத்தாத நாம், அரசியல் தடத்தில் இப்படி நடைபயிலும் அவியல்வாதிகளை என்ன செய்ய முடியும்?...

இதே தார்ச்சாலை, — தேசீய நெடுஞ்சாலை என்னும் பெயரில்,—பல ஊர்களை இணைத்துக்கொண்டு, நாடெங்கும் விரிந்து கிடக்கிறது. அது செல்லும் கிராமப் புறங்களில் உள்ள நமது மக்களுக்கு 'இது வண்டிகளுக்கு உரிய சாலை' என்ற எண்ணமே உண்டாக வில்லை. பல ஊர்களில், இந்தச் சாலையை நன்றாகப்பெருக்கி அதிலே நெல் உலரப் போடுகிறார்கள்; சில இடங்களில் நெற்கதிர்கள், சோளக் கதிர்கள், கேப்பைக் கதிர்கள் முதலியவற்றை உலர்த்தும் களமாக இதைப் பயன் படுத்துகிறார்கள்! (மாட்டு) வண்டிக் காளைகள் தங்கள் நடையை நிறுத்திவிட்டு இவைகளை மேயத் தொடங்கி விடுகின்றன: பேருந்து, மகிழுந்துக்காரர்கள், — பாவம், வைக்கோல் முதலியன வண்டியின் சக்கர அச்சிலே சிக்கிக் கொண்டு தொல்லை கொடுக்குமே என்று பயந்து, —சாலையை விட்டுக் கீழே இறக்கி அவைகளை ஓட்டுகின்றார்கள். விபத்து ஏற்படுகிறது ஏற்படுகிறது என்றால், ஏன் ஏற்படாது?

நமது மக்கள் ஒற்றையடிப் பாதைக்கும் மண்வழி வண்டித் தடத்துக்குமே பழக்கப் பட்டவர்கள்; தார் போட்ட அழகிய சாலை, வண்டிகள் போவதற்காக அமைக்கப்பட்டது என்பதை அவர்களால் நம்பவே முடியவில்லை. இதை அவர்களுக்குக் கற்றுத் தருவாரு மில்லை; சாலையை வேறுவிதமாக அவர்கள் பயன் படுத்துவதைக் கண்டிப்பாரும் இல்லை. கண்டிக்கப் போனாலோ, - அங்கே, கட்சிப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை, ஊர்ப்பிரச்சினை, முதலாளி - தொழிலாளிப் பிரச்சினை என்று ஏதேதோ எழுகிறது. மேற்படியார்கள் கூடிக்கொண்டு, "அவன் அப்படித்தான் செய்வான், போய்யா!" என்கிறார்கள். இதே கூட்டம்தான், அரசி யல் சாலையில், அரசியலை வழிமறித்துக் கொண்டு, சுயநலம் என்னும் நெல்லை உலர்த்திக் கொண்டு இருக்கிறது!

## ....மகேசனின் இல்லம்!

குடியாட்சிமுறை தோன்றிய காலத்தில், "மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற ஒரு குரல் ஒலித்தது. நமது நாட்டிலோ "மக்கள் பாதையே மகேசனின் இல்லம்" என்பதாக அது மாற்றி இசைக்கப்படுகிறது. பேரூர் களிலும் மாநகரங்களிலும் பார்த்தால் தெரியும்; பல அழகான வீதிகளின் இரண்டு பக்கமும் உள்ள பிளாட் பாரம் என்னும் நடைமேடைகளில் சிறிய தெய்வங் களுக்குக் கோயில்களை எழுப்பியுள்ளார்கள். கோயில் கள் பாதைக்குள்ளே நீண்டு அங்கங்கே நல்ல மறைப் புக்களை உண்டாக்குவதால், - பொறுப்பற்ற பலபேர், அங்கேயே மலசலம் கழித்து, அந்த இடத்தையும் சாலையையும் சாமியையும் அசுத்தப்படுத்துகிறார்கள்!

அதிகாரிகள் கெஞ்சிக் கேட்டாலும் மிஞ்சிக் குரல் கொடுத்தாலும், இந்தக் கோயில்களை எழுப்பியுள்ள பக்தர்கள் காதுகொடுப்பதே இல்லை. "அது மக்கள்

நடக்கும் பாதையாயிற்றே; நமது தெய்வத்தை அந்த இடத்தில் வைத்து, அந்த இடம் அசுத்தமாவதற்கும் போக்குவரத்து இடைஞ்சலுக்கும் நாம் காரணமாக லாமா?'' என்று நமது பக்தர்கள் நினைப்பதே இல்லை. அதிலே போய், ''நீ பெரியவனா, என்னுடைய கடவுள் பெரியவரா?'' என்று சவால் விடுகிறார்கள். சவால் விடுவதற்கு அதுவா இடம்? இப்படி, நமது மக்கள், பீடம் தெரியாமல் சாமி ஆடுவதால்தானே, - அரசியல் அரங்கத்தில் மக்களின் குரல் கேட்பதற்குப் பதிலாக,- எப்படியோ தலைமையைப் பிடித்துக்கொண்டு தடி யெடுக்கும் யாரோ ஒரு தண்டல்காரனின் குரலே அங்கே கேட்கிறது!.

சென்னை மாநகரில், முன்பு நடைபாதையில் ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் கோயில் இருந்த இடங்களி லெல்லாம், இப்போது (எதிர் எதிராக) இரண்டு பக்கமும் கோயில் எழுந்திருக்கிறது. நாம் வீரத் தமிழர்களாயிற்றே; ஒருவன் மற்றவனுக்கு இளைத் தவனாக இருக்கலாமா? எனவே இதிலும் போட்டி...! சென்னை மாநகராட்சியின் ஒரே ஊழல் தொடர்பாகப் பல கட்சிக்காரர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பது, இந்த நடைபாதைக் கோயில் போட்டியைத்தான் நினைவு படுத்துகிறது. ஆம்; அங்கும் போட்டி: ஆளும் கட்சிக் காரன்தான் ஊழல் செய்வதா என்று, எதிர்க்கட்சிக்காரர் களும் அதிலே வீராவேசமாகக் குதித்திருக்கிறார்கள்! இதற்குத்தானா அரசியல்? எந்தப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவது இவர்களை?...

## 'முதலாளித்துவம் ஒழிக!'

தமிழக அரசியலை விளக்குபவைகளாகவும், 'நமக்கு எதிலும் எதுவுமே தெரியாது' என்பதைத் துலக்குபவை களாகவும் வேறு சில நிகழ்ச்சிகளும் தமிழகத் தலை நகரில் அன்றாடக் காட்சிகளாக நடைபெற்று

வருகின்றன: சாலையின் சில இடங்களில் "துப்புரவான பகுதி" என்று ஓர் அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருக்கிறது. அதன் அடியிலேதான் அசுத்தமும் ஈரமும் மண்டிக் கிடக்கின்றன; ஈக்கள் மொய்த்துக் கிடக்கின்றன; வராகம் என்னும் பன்றிக் குடும்பத்தார் விழுந்து புரண்டு மகிழ்கின்றார்கள்! இப்படி நிகழ்ச்சிகள் உள்ள இடத்தில் அப்படி ஒரு பலகையை ஏன் வைத்தார்கள்?

அங்கங்கே குவிந்து கிடக்கும் அசுத்தங்களை அள்ளிச்செல்ல, நகராட்சியார் சரக்கு உந்து(லாரி)களை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வண்டியில் செல்லும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் ஓட்டலில் மேசை துடைக்கும் பையன்களுக்கும் வேறுபாடே இல்லை; அவர்கள், மேசையின் ஒரு பக்கத்தில் சிந்தியுள்ள எச்சிலை அதன் எல்லாப் பக்கமும் பரப்பி வைப்பார்கள்; இவர்கள், "துப்புரவான பகுதி"யில் அள்ளிவந்த அசுத்தங்களை நன்றாக உள்ள மற்றச் சாலைகளிலெல்லாம் சிதறிக்கொண்டே போகிறார்கள்!

யாருக்கோ 'துப்புரவாளர்கள்' என்று முத்திரை குத்திவிட்டோம்; துப்புரவு செய்வது என்றால் என்ன என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. துப்புரவுப் பணியின் அடிப்படை அம்சங்களை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பாரும் இல்லை. "இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டால், அவர்களின் சங்கம் கூட்டமாக வந்து நிற்கும்: "முதலாளித்துவம் ஒழிக!" என்று முழங்கும். என்ன செய்வது? முதலாளித்துவம் தொழிலாளித்துவம் என்றால் என்ன என்பதே நமக்குத் தெரியவில்லை!

இப்போது, யாராவது, "அவரவரும் தங்கள் தங்கள் வேலையை ஒழுங்காகச் செய்யவேண்டும்" என்று சொன்னால்,–அவரே, ஒழிக்கப்படவேண்டிய முதலாவது 'முதலாளி'; வேலையைச் செய்கிறானோ இல்லையோ,– கூலி உயர்வுப் போராட்டத்துக்கு முன் வரிசையில் நிற்பவனே லட்சியத் தொழிலாளி! இது நமது தொழிற்

சங்க நடவடிக்கை மாட்சி. அரசியல்வாதி மட்டும் என்ன செய்வான்? தன்னுடைய கடமையை அவன் சரிவரச் செய்யவில்லை என்று குற்றம் சாட்டப் போனால்,- எவைஎவைகளின் பேராலோ வெறிப்படை சேர்த்துக் கொண்டு தன் கோரப் பல்லைக் காட்டுகிறான் !

## புயலுக்கு முந்திய அமைதியோ?

இப்படி ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லிக் கொண்டே போனால், நாட்டின் எல்லாத் துறைகளுமே வந்து வரிசையில் நிற்கும்: "மகோன்னத"த் தொழில் புரிவோராகிய டாக்டர்களும் ஆசிரியர்களும்கூட தப்ப மாட்டார்கள்; 'அவர்கள்தான் கள்ளத்தனத்துக்கும் குள்ளத்தனத்துக்கும் குழப்படித் தனத்துக்கும் வழி காட்டிகளோ?' என்றுகூட அய்யங்கொள்ள நேரும்! ஒவ்வொரு துறையிலும் உள்ள அத்தனை பேருமே, அடிப்படையான ஆனா ஆவன்னாவே தெரியாமல் பட்டதாரிகளாகிவிட்டார்கள்.

நம் நம் தொழில்களைப் பற்றிய அறிவு நமக்கு இல்லை; நமது தொழில்களத்தைப் பற்றி, சிறிதளவு மதிப்பும் நாம் வைத்திருக்கவில்லை. இந்தக் குழப்பம் எங்கே போய் முடியும்? தார்ச்சாலைகளைப் பெயர்த்து எறிந்துவிட்டு, - பழையபடி ஒற்றையடிப் பாதைக்கே போய்விடுவோமா? துப்புரவுப் பணியையே உதறிவிட்டு பழைய மலேரியாக் கொசுக்களோடேயே சேர்ந்து வாழப் போகிறோமா?... இந்தக் கேள்வி மிகுந்த குழப்பத்தையும் திகைப்பையும் தருகிறது. இதைவிட, இந்த அறியாமையையும் குழப்பங்களையும் பொறுத்துக் கொண்டு,- ஒன்றுமே நடவாததுபோல நமது பொது மக்கள் இருந்துகொண்டு இருப்பதைப் பார்த்தால்தான் திகைப்பாகவும் பயமாகவும் இருக்கிறது: பயங்கரமான புயல் வருவதற்குமுன்னால்தான் அதைவிடப் பயங்கர மான அமைதி நிலவும் என்று சொல்வார்கள். *

# 3 இவர்கள் நமது காவலர்களா?

ஓடுகின்ற கள்ளமாட்டின் கழுத்திலே உள்ள தும்பை (கயிற்றை) விட்டுவிட்டு, அதன்வாலை எட்டிப் பிடிப்பதும்.-அந்த வாலையே, "கொம்பு கொம்பு!" என்று தம்பட்டம் அடிப்பதுமே இந்த நாட்டின் 'காவலர்கள்' என்பவர்களின் வழக்கமாக இருந்து வருகிறது. அதாவது, போலீசுக்காரர்கள்என்னும் காவலர்களைமட்டும் சொல்ல வில்லை; அன்பின் காவலர், அறத்தின் காவலர், பண்பின் காவலர், கல்வியின் காவலர், ஒழுக்கத்தின் காவலர், மக்களின் காவலர்களாகிய முடிசூடா மன்னர்கள் என்னும் எல்லோருடைய போக்கும் இப்படித்தான் இருக்கிறது . .

## அழுக்குக்குத் திலகமிட்டு

ஓர் எளியவன் தவறு செய்து விட்டால், "நீ குற்ற வாளி" என்று, அவனை நோக்கி விறைப்பாக நீள்கின்ற சட்டத்தின் சுட்டுவிரல்,-பணக்காரன் அதே குற்றத்தைச் செய்யும்போது, அவனை நோக்கி எழுந்திருக்கவே மறுக்கிறது. சாதி, மத பேதங்களுக்கு இடம் தராத அறிவியவாதிகளின் செயல்களை வேட்டைநாய் வேகத் தில் மோப்பம் பிடிக்கின்றவர்கள்,- மதவாதிகள் செய் கின்ற அழிம்புகளைக் கண்ணாரக் காணும்போதும், உப தேச உரைகளோடேயே ஒதுங்கி விடுகிறார்கள்; அல்லது ஒன்றுமே சொல்லாமல் பதுங்கி விடுகிறார்கள் . .

உலகில் உள்ள மற்ற நாடுகளின்நிலை எப்படியோ? இந்தநாட்டைப் பொறுத்தவரையில்,- அத்தனை ஒழுக்கக் கேடுகளுக்கும் சமுதாய அழுக்கு உற்பத்திக்கும் மதமே இங்கே, வளமான, வசதியான, பாதுகாப்பான பண்ணை யாக இருக்கிறது: சாணத்திலும் களிமண்ணிலும் மட்டு மல்லாமல், அழுக்கிலேயே சாமியைப் பண்ணிவைத்துக் கொண்டு,- அதைக் கும்பிடுகிற நாடு அல்லவா இது!

## அந்த இன்பம் அறிவாயோ?

மதத்தையும் அதன் அடிப்படையாக உள்ள மூட நம்பிக்கையையும், இவைகளுக்கெல்லாம் மூலமாகஉள்ள கடவுள் நம்பிக்கை என்பதையும் ஒழித்து விட்டால், மக்களின் ஒழுக்கக்கேடு ஒருவாறு நின்றுவிடும் என்று அறிவியத்தோர் சொல்லும்போதெல்லாம்,- மேற்படிக் குட்டைகளில் நீச்சல் அடிக்கிற பக்தர்கள் என்பவர்கள் " அய்யோ..., இப்படிப் பேசலாமா? இதைக் கேட்டு எங்கள் பொன்னான நெஞ்சம் புண்ணாகிப் போனதே' என்று ஓலமிடுகிறார்கள் ஆனால்,- ஆண்டுக்கு ஒரு முறை இருமுறை அல்ல,- மாதம்தோறும் அல்ல,-ஏன், நாள்தோறும்கூட அல்ல;- ஒவ்வொரு விநாடியும், பக்த கோடிகள் என்பவர்கள் மற்றவர்களின் கண்ணையும் காதையும் மனத்தையும் புண்படுத்தியே வாழ்கிறார்கள் என்பதை எந்தக் காவலரும் உணர்வதே இல்லை; அதைத் தடுக்கும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளுவதும் இல்லை!

சென்னை போன்ற நகரங்களில் அதிகாலையில் நாலு தெருக்களில் நடந்துபாருங்கள்: வானொலிப் பெட்டி வாங்கக்கூடிய வசதி உள்ள ஒவ்வொரு பக்தனும் சுப்பிரபாதம் என்னும் சப்பைக் குரலை, நமது காதைக் கிழிக்கும் வேகத்திலே திருப்பிவிட்டிருக்கிறான்; சந்திக்குச் சந்தி, அல்லது பிளாட்பாரம் என்னும் சாலை மேடை களில் பாருங்கள்: மனித அறிவுத்தரத்துக்கே மானக்கேடு

விளைவிக்கக்கூடிய அலங்கோல உருவங்களைச் சாமி என்று பெயர்வைத்து, அங்கங்கே நிற்கவைத்திருக் கிறார்கள். திருவிழா அல்லது கொண்டாட்டம் என்று வந்துவிட்டாலோ, கேட்க வேண்டியதே இல்லை; இந்தக் காலத்தில் வாழவேண்டிய மக்கள் பார்க்கவோ கேட்கவோ முடியாத அலங்கோலங்களிலே மூங்கி முழுகித் திளைக்கத் தொடங்கிவிடுகிறார்கள், பக்தர்கள்!

யாரோ ஒருவன், கால் இடறிக் கீழே விழுந்துவிடுவது சாதாரணமாகநடக்கக்கூடியதே. ஆனால் 'தம்பீ, விழுந்து விட்டாயே,-எழுந்திரப்பா' என்று பரிவோடு ஒருவன் சொன்னால்,- "விழுந்துவிட்டேன் என்றா சொன்னாய்? இதோபார், இனிமேல் உன்மேலேயே விழுவேன்" என்று சவால் விடுகிறான் நம்நாட்டு பக்தன்! "நீ எங்கேயாவது விழுந்து தொலை, - மற்றவன்மேலே விழாதே, - ஒதுங்கி விழு" என்று காவலர்கள் விநயமாக வேண்டிக் கொண்டாலோ, பக்தன் உச்சாணிக் கொம்பிலேயே ஏறிவிடுகிறான்: "அடுத்தவன் மேலே விழுகிற பேரின்பம் உனக்குத் தெரியாது; நீ அஞ்ஞானி, இதோபார்!" என்று சொல்லி, காவலாளியின் மேலேயே விழுகிறான்.!

## ஆணை ஒடிந்தது!

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் ஒருகோவை அல்லது களஞ்சியம்தான் மதங்களின் வரலாறு; அந்த வரலாற்றுப் பொன் ஏடுகளிலே ஒன்று, அண்மையில் பம்பாய் மாநகரில் விரிந்துள்ளது:

போலீஸ் கமிஷனர் என்னும் காவல்துறை ஆணையர் ஓர் ஆணை பிறப்பித்தார்: (இரவு) குறிப்பிட்ட (அனுமதிக் கப்பட்ட) நேரத்துக்குப் பிறகு யாரும் எந்த நிறுவனமும் இரைச்சல் கிளப்பக்கூடாது; ஒலிபெருக்கி வைத்துக் கொள்ள அனுமதிபெற்று நிகழ்ச்சிகளை நடத்தும்போது,

தங்கள் கூட்ட இடத்துக்கு அப்பால் சென்று மற்றவர் களின் காதைத் துளைப்பதாக ஒலிபெருக்கியை எழுப்பக் கூடாது.'' இதுதான் அந்த ஆணையின் சாரம்.

ஆணை பிறப்பிக்கப்பட்டுப் பதினைந்துநாள்கூட ஆகவில்லை; பக்தர்களின் ஒரு சாமிக்குத் திருவிழா வந்தது. அவ்வளவுதான்: ஆணை காற்றிலே பறந்தது; இரவு விடிய விடிய ஊரில் உள்ளவர்களின் செவியெல் லாம் கிழிந்தது; உறக்கம் தொலைந்தது. அத்தனை ஒலிபெருக்கிகளை முடுக்கிவிட்டுவிட்டார்கள், பக்தர்கள்!

## காவலர்கள் கதை என்ன?

பக்தர்கள் நடந்துகொண்டதிலே வியப்பு ஒன்று மில்லை: அவர்களின் வழக்கமான பாணியே அதுதானே? ஆணையரின் ஆணையை மதிக்காமல் செயல்பட்ட இந்த விழாக்காரர்களைக் கண்டித்து எழுதிய பத்திரிகை களின் போக்குத்தான் நமக்கு வியப்பாக இருந்தது.

இந்தச் சமுதாயக் காவலர்கள் எல்லோரும், ''ஆணையை இப்படி அவமதிக்கலாமா?'' என்றார்கள்; ''நமது மக்களுக்குச் சமுதாய உணர்வே இல்லையே'' என்று ஒரு குரல் அழுதார்கள்; ஆனால், அவர்களில் ஒரே ஒருவர்கூட, ''இந்தச் சண்டித்தனம் மதத்தின் பேரால் நடந்திருக்கிறது;- அதனால்தான் இவ்வளவு துணிவாக நடந்திருக்கிறது'' என்று சொல்லி,- அந்த உண்மையான குற்றவாளியை நோக்கித் தங்கள் சுட்டுவிரலை நீட்டவில்லை!

இதே சமயம், வேறொரு நிகழ்ச்சியைக் கற்பனை செய்வோம்: யாராவது ஒருவர், ஒரு கோயில் என்பதன் முன்னாலே நின்று, கோயில்களால் வளர்க்கப்படும் மூடத்தனத்தைக் கண்டிக்கும் ஒரு பாடலைப் பாடட்டும்; என்ன குதிகுதிப்பார்கள் பக்தர்கள்! சட்டத்தின் காவலர்

களும்,- தங்கள் கைப்பிரம்பைச் சுழற்றிக் கொண்டு,- "ஆகா, செய்யலாமா இப்படி!" என்று அல்லவா, வரிந்து கட்டுவார்கள்!

ஒரு பகுத்தறிவுக் கூட்டம், அனுமதி வாங்கப்பட்ட நேரத்துக்குமேல் அய்ந்து நிமிடம் நடந்துவிட்டால், காவலர்கள் குறுக்கே பாய்ந்து மின்சாரத் தொடர்பைப் பிடுங்குகிறார்கள்; அனுமதிக்கப்பட்ட நேரத்துக்குமேல் அணுவளவும் தாண்டிவிடக்கூடாது என்று, முதலி லேயே பெரிய எழுத்தில் எச்சரிக்கிறார்கள். மதத் திருவிழா என்னும் இந்தக் காதுகிழிப்பு விழாவோ, முதல்நாள் மாலையில் தொடங்கி அடுத்தநாள் காலை மூன்று நாலு மணி வரை நடந்திருக்கிறது. அதுவரையில் போலீசார் எங்கே போயிருந்தார்கள்?

## காற்று இல்லாமல்...

பாவம், காவலர்களைச் சொல்ல ஒரு குற்றமும் இல்லை. அறிவாளிகள் என்றும் அதிகாரிகள் என்றும் இருக்கின்ற பெரியவாள்களே அணுக அஞ்சுகின்ற மதக்குகையை இந்த அப்பாவிகள் அணுகமுடியுமா? ஆனாலும்,- மக்களின் ஒழுக்கத்துக்கும், அவர்களின் அமைதியான வாழ்வுக்கும்,- அவர்களுடைய வாழ்வின் நலத்துக்கு மிகமிகத் தேவையான உறக்கத்துக்கும் கேடு விளைவிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள மதத்தைப் பார்த்து, "நீதான் குற்றவாளி!" என்று சொல்ல ஓர் ஆட்சிக்கும் துணிவு வரவில்லையே. அறிவியல், அது இது என்பதெல்லாம் வேறு நாடுகளிலேதானோ? அதன் காற்று இந்தப் பக்கமாக வீசவே இல்லையோ? அந்த நல்ல காற்று இங்கே வீசியிருந்தால், நமது காவலர்கள், இவ்வளவு நோஞ்சான் களாகவா இருப்பார்கள்?..

*

# 4 வள்ளல்களா, முதலைகளா?

"சாதியின் பேராலோ, கடவுளின் பேராலோ, பொருள் உடைமையின் பேராலோ மேலே ஏறிக் கொண்டவன் பெருச்சாளி போன்றவன்; அவன், தன்னைச் சுற்றியுள்ள மற்ற மக்களின் உரிமைகளைக் கரம்பித் தின்றுகொண்டேதான் இருப்பான்! அத்தகையவன் பெரிய முதலையைப் போன்றவன்; அவன் மற்ற மக்களுக்கு உரிய சுகத்தையும் இன்பங்களையும் விழுங்கி ஏப்பமிட்டுக்கொண்டேதான் இருப்பான்! அவனை மேலே உட்காரவைத்துக்கொண்டு, 'மயிலே மயிலே ஒரு இறகுபோடு' என்று கெஞ்சுவதிலே ஒரு பயனும் இல்லை: அவனைக் கீழே இழுத்துத்தள்ளி, அவன் விழுங்கியவற்றைக் கக்க வைப்பதுதான் அவனுக்கும் நல்லது; அவனால் சுரண்டப்பட்ட மக்களுக்கும் நல்லது... அதாவது, அதுவே சமுதாயம் முழுமைக்கும் நல்லது"

## நாளடைவில் தெரிகிறது

இப்படிச் சிலபேர் பேசும்போது அல்லது எழுதும்போது,- வேளாவேளைகளில் இத்தகைய நடைமுறைகளிலே சிலபேர் ஈடுபட்டு விடும்போது,- பலருக்குக் கோபம் கோபமாக வருகிறது: "இது அநாகரிகம்!" என்று குமுறுகிறார்கள்; "சமுதாயம் கட்டிக் காத்து வரும் பாரம்

பரியப் பண்பையே இது அழித்து விடும்!'' என்று ஆத்திர உபதேசம் பண்ணவும் அவர்கள் புறப்பட்டு விடுகிறார்கள்.

நானும்கூட,- பலகாலமாக 'பணக்காரர்களிலே எத்தனையோ நல்லவர்கள் இருக்கிறார்களே' என்று நினைத்தது உண்டு; 'எத்தனையோ ஏழைபாழைகளுக்கு இவர்கள் உதவுகிறார்களே' என்று நினைத்தது உண்டு; பள்ளிப்பிள்ளைகளுக்கு இவர்கள் சிலேட்டும் புத்தகமும்-, அவ்வப்போது பணமும்,- உதவுகிறார்களே என்றும் எண்ணியது உண்டு.. ஆனால், வெகு தொலைவில் நின்று எட்டிப்பார்த்து நான் தெரிந்துகொண்ட இந்தச் செயல்களின் மறைவிலே,- பழைய கரம்புதலும் விழுங்குதலும் ஆகிய பணி நடந்துகொண்டேதான் இருக்கிறது என்பதை நாளடைவிலேதான் நான் தெரிந்து கொண்டேன்...

## ஆதாயம் இல்லாமலோ

நம்முடைய திருவள்ளுவர் கூட மற்றவர்களுக்கு உதவுகின்ற பெரிய மனிதர்களைப் பற்றி அழகழகாகப் பேசி இருக்கிறார்: 'நயனுடையான் என்று ஒருவன்; இவன், தன்னுடைய செல்வத்தின் மூலம் ஈட்டப்படும் வருவாயில் ஒருபகுதியை மற்றவர்களுக்குக்கொடுப்பான். பேரறிவாளன் என்று ஒருவன்; இவன் தன்னுடைய செல்வம் அனைத்தையும் மற்றவர்களுக்கே கொடுத்து விடுவான். பெருந்தகையான் என்று ஒருவன்; இவன், தன்னுடைய செல்வத்தை மட்டுமல்ல, தன்னுடைய உயிரையே மற்றவர்களுக்காகக் கொடுத்துவிடுவான்!'... இப்படி, பல தமிழறிஞர்கள் விளக்க உரையும் விரிவுரையும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஆனாலும்,- நின்று நிதானித்துப் பார்க்கையில்,- எந்த ஒரு வசதியாளியும் தன்னுடைய வசதிகளில் ஓர் அணுவளவும் (மற்றவர்களுக்காக) விட்டுக்கொடுத்

திருப்பதாகத் தெரியவில்லை. அவன் மற்றவர்களுக்குச் செய்கிற எந்த உதவியும், அவன் மற்றவர்களின் உரிமையை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை மறைப்பதற்கு ஒரு திரையாகவே பயன்பட்டு வந்திருக்கிறது; அத்தகைய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தடம் அமைக்கவே அந்த "வள்ளல்தனம்" பயன்பட்டு வருகிறது. "ஆதாயம் இல்லாமல் செட்டி ஆற்றோடு போவானா?" என்று வழங்குகிற நமது பழமொழி,- இந்த உண்மையைத்தான், நமக்காக, இங்கே முன்பே சொல்லிவைத்திருக்கிறது!

## அவசரநிலை வந்தது

வசதியாளிகளின் ஆக்கிரமிப்பு நடைக்கு எடுத்துக் காட்டுச் சொல்லுவது என்று போனால், அதற்கு ஒரு அளவே இராது; இந்த நாட்டின் நீண்ட வரலாறே, வசதியாளிகள் மற்றவர்களின் உரிமைகளை ஆக்கிரமித்துக்கொண்ட வரலாறுதானே? ஆகையால், அண்மையில் நமது இந்தியத் தலைநகரில் நடந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் விவரிக்கிறேன்...

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த 1947 ஆகஸ்டு 15-லேயே பிரகடனப்படுத்தப் பட்டிருக்க வேண்டிய அவசரநிலை (நெருக்கடி நிலை),- இதுவரை இழுத்துக் கொண்டே வந்து,- ஏனோ, திடீரென்று இப்போது அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. (நமதுநாட்டில் எது, ஏன், எப்போது நடக்கிறது என்று சொல்லமுடியாது; அதைப் பற்றிய ஆராய்ச்சிகளில் இறங்குவது விபத்துக்களை விலைக்கு வாங்குவதாகும் என்பதால், அதை அப்படியே விட்டுவிடுவதே நல்லது...!)

அவசர நிலை அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து புதுடில்லி நகராட்சி சில மாறுதல்களைச் செய்ய முன் வந்தது. அவைகளிலே ஒன்று, கடைவீதிகளில் நடந்துள்ள இட ஆக்கிரமிப்பை ஒழிப்பதைப் பற்றியது.

தலைநகரம் என்பதால், இங்கே பெரிய பெரிய கடைவீதிகள் பல உள்ளன. அவைகளின் அலங்காரத்தையும் சோடனைகளையும் பார்த்தால், அங்கே ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது என்று யாரும் சொல்ல மாட்டார்கள். புன்னகை பூத்த முகத்தோடு அழகிய கார்களிலே வந்து இறங்குகிற வியாபாரிகள், நம்மைப் போன்ற சாமானியர்களிடம் மிகமிக இனிமையாகப் பழகுகின்ற நாகரிகத்தைப் பார்க்கின்ற போதும்,- அவர்கள் ஓர் அணுவளவு இடத்தையாவது ஆக்கிரமிப்புச் செய்யக்கூடியவர்கள் என்ற நினைப்பே, யார் ஒருவருக்கும் வரமுடியாது!

ஆனால், இந்த நாட்டு எளியவர்களின் கண்கள் எவ்வளவு இருண்ட கண்கள்! எவ்வளவு ஏமாந்த கண்கள்! அவைகளின் எதிரிலேயே நடக்கின்ற காட்சிகளைக்கூட அந்தக் கண்களால் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியவில்லையே!

## ஆணையர் போட்ட ஆணை

நகராட்சி ஆணையர், அவசர நிலையின் பேரால், ஒரு தேதி குறிப்பிட்டு,- "இந்த (7-8-75)த்தேதிக்குள் கடைக்காரர்கள் வீதியில் செய்துள்ள ஆக்கிரமிப்பை அவரவர்களே காலிசெய்ய வேண்டும்; தவறினால், அடுத்தநாள் காலையிலேயே நகராட்சியார் அவைகளை இடித்துத்தள்ளுவார்கள்" என்று அறிவிப்புச் செய்தார். அறிவிப்பு வந்து இரண்டு நாளிலேயே எல்லாக் கட்சிக் காரர்களும் தங்கள் கடைகளில் (திடீர் திடீரென்று) காங்கிரஸ் கொடிகளைப் பறக்கவிடத் தொடங்கினார்கள்; நாலைந்து நாள் வரை அந்தக் கொடிகள் பறந்து கொண்டு இருந்தன. இத்தகையவர்கள் கையாளும் பழைய தந்திரம் இது. ஆனால், ஆட்சி நடத்துவது காங்கிரஸ் கட்சி அல்ல,-அவசர நிலையே நாட்டை ஆள்கிறது என்பதை, பாவம், அவர்கள் அறியவில்லை!

கடைக்காரர்கள் கூடிக்கூடிப் பேசினார்கள்: இந்தப் புதிய அறிவிப்பிலிருந்து தப்புவது எப்படி என்று ஆலோசித்திருப்பார்கள். இரகசியக் கூட்டங்கள் எத்தனை நடந்தனவோ?

ஆணையர் "துணிந்த கட்டை" போலிருக்கிறது; அறிவித்த கெடுவுக்கு முந்திய நாளும், "நாளை காலை யில் நாங்கள் வரவேண்டியதிருக்காது என்று நம்பு கிறேன்" என்ற அறிவிப்பைத் தப்பட்டை அறைந்து கடைத்தெருவில் பரப்பினார்!

மாலை ஏழரை மணிதான் கடையடைப்பு நேரம். சுமார் எட்டுமணியளவில், (புது டில்லி, கரோல்பாக் பகுதியில் உள்ள) அஜ்மல்கான் ரோடு என்னும் கடை வீதியில் சென்றேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை! அத்தனை அலங்கோலமாகக் காட்சி அளித்தது கடைத்தெரு! குண்டுவீச்சுகளுக்கு இலக்கான பெருநகரங்கள் இப்படித்தான் காட்சி அளித்திருக்குமோ?

## நம்பவே முடியவில்லை!

அஜ்மல்கான் ரோடு, டில்லியிலே உள்ள மிகப் பெரிய கடைத்தெருக்களிலே ஒன்று. பெருவீதியும் கிளை வீதிகளுமாக, சுமார் 200 ஏக்கர் நிலப் பரப் பளவைக் கொண்டது. வீதியின் இருமருங்கும் எழுந்து பொலியும் பெரும் பெரும் கடைகளின் தொகை, சுமார் ஓராயிரத்துக்குக் குறையாது. அத்தனை கடையும் (ஒன்றுகூடப் பாக்கியில்லாமல்) முகப்புப் பகுதி இடிக்கப் பட்டுப் பரிதாபக் கோலம் காட்டின. 'காலையிலே இந்தக் கடைகள் எழுந்து நின்ற கம்பீரம் என்ன,- இப்போது அவை நொறுங்கிக் கிடக்கும் அலங்கோலம் என்ன!'...

வீதி முழுவதும் ஒரு நடை நடந்து பார்த்தேன்: என் வாய் திறந்தது திறந்தபடியே இருந்தது; வியப்பால் விரிந்த என் விழிகள் விரிந்தபடியே இருந்தன.! 'இத்தனை பெரிய கடைவீதியில், தெருவிடத்தை ஆக்கிரமிப்புச் செய்யாத வியாபாரி ஒரே ஒருவன்கூட இல்லையா?!,'

இவை எல்லாம், ஓரஞ்சாரத்தில், யாரோ ஏழைகள் வைத்த தேநீர்க் கடைகள் அல்ல; சாதாரண வியாபாரிகள்,- சாப்பு இறக்கி, ஆங்காங்கே வைத்த சில்லறைக் கடைகள் அல்ல; அத்தனையும் லட்சக் கணக்கான, பல லட்சக்கணக்கான ரூபாய் முதலீட்டில் நடைபெறும் துணிக் கடைகள், பாத்திரக் கடைகள், நகைக்கடைகள், நவநாகரிகமான உண்டிக் கடைகள்...! அத்தனை பேரும் தங்கள் கடையைப்போல் அய்ம்பது (50) சதவீத இடத்தை, மக்கள் நடக்கும் தெருவாக உள்ள பொது இடத்திலிருந்து பறித்துவைத்து, அதன் மீதே அலங்காரமாகக் கடைஎழுப்பி இருந்திருக்கிறார்கள்!

பல ஆண்டுகளாக, அந்த (அஜ்மல்கான்) சாலையில் நடந்த போதெல்லாம்,-இந்த நாட்டின் புண்ணிய மாதாக்களாகிய கோமாதாக்கள் ( அதாவது, மாடுகள் ) தெருவை அடைத்துக்கொண்டு திரிவதைக்கண்டுதான் நான் வருத்தப்பட்டிருக்கிறேன்: "கோமாதாக்கள் என்ற பெயரில் அவிழ்த்துவிடப்பட்டுள்ள இந்தச் சமுதாய இடையூறுகளை அகற்றித் தெருவைச் சரிப்படுத்த ஒரேஒரு முதுகெலும்புள்ள அதிகாரி இல்லையே'' என்று தான் நான் நினைத்திருக்கிறேன். தெருவில் இரண்டு பக்கமும்,- அத்தனை பெரிய மனிதர்களும், அந்தக் கோமாதாக்கள் போலவே, மக்களின் இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியவே தெரியாது. இத்தனை அழகாக, உறுதியாகக் கட்டிடங்களையும் பெயர்ப் பலகையையும் எழுப்பி யிருப்பதைப் பார்க்கின்ற யார்தான் அப்படி நினைக்க முடியும்?...

அதுமட்டுமா? இந்த வீதியிலே வாரம் தவறாமல் 'பகவதி ஜாகரணி' என்னும் ஆடம்பரமான வழிபாடு நடக்கும்; ஏழைகளுக்கும் ஆடுமாடுகளுக்கும் தாராள மாக உணவு வழங்குவார்கள். இங்குள்ள பல பெரிய வியாபாரிகளோ வள்ளல்கள், நன்கொடை மன்னர்கள், ஏழைகளின் தோழர்கள் என்றெல்லாம் பட்டங்கள் பெற்றவர்கள். அவர்கள்தான் இந்தத் திருட்டுச் செயலில் இவ்வளவு தாராளமாக ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள்!

## வருக, அந்த நாள்!

நகரங்களில் உள்ள சாலைகள் மட்டுமல்ல,–இந்த நாட்டிலுள்ள பலகோடி ஏழை எளிய மக்களின் வாழ்க்கைப்பாதையே, இப்படித்தான், வசதியாளிகளால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆணையர் போன்ற ஓர் ஆட்சியாளன் தோன்றி,–"எங்கள் நாட்டு வசதியாளிகளே, உங்களுக்கு உரிமை அல்லாத உடைமைகளை எல்லாம் களைந்துபோடுங்கள்" என்று ஆணை பிறப்பிக்கும் போதுதான்,– இந்த நாட்டு அப்பாவிகள், தங்களுடைய உரிமையும் உடைமையும் எந்த அளவுக்கு ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தன என்பதை அறியப் போகிறார்கள்.. உழைப்பாளி களும் ஒதுக்கப்பட்டவர்களுமான பலகோடி மக்களின் ஒருமித்த குரலின் வடிவத்திலே அத்தகைய ஆட்சி யாளன் எப்போது வரப்போகிறான் என்பதைத்தான் இந்த நாட்டுப் பஞ்சைகள் ஆவலோடு எதிர்பார்த்த வண்ணமாக இருக்கிறார்கள். ஏனெனில்,– பட்டுக் கோட்டைக் கவிஞன் சொன்னதுபோல,–

*வசதி இருக்கிறவன் தரமாட்டான்–அவனை*
*வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்!* *

# 5 புண்ணியப் பூமியா, விலங்ககமா?

"1976ஆம் ஆண்டிலே இங்கே வாழ்ந்துகொண்டு இருக்கும் அறுபதுகோடி மக்களிலே சுமார் அய்ம்பத்தொன்பது கோடிப்பேர் (அல்லது அதற்கும் அதிகமான பேர்) உண்மையான மனிதர்கள் அல்ல, - இவர்கள் விலங்ககம் என்னும் மிருகக் காட்சிச்சாலையில் அடைக்கப்பட்ட ஆறறிவுப் பிராணிகளே" என்று சொன்னால், பலபேர் துள்ளிக் குதிப்பார்கள்; "விட்டேனா பார்!" என்றும் மீசையை முறுக்குவார்கள். ஆனால், இதை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளத்தான் அவர்கள் பயப்படுகிறார்களே தவிர,— உள்ளுக்குள், ஒவ்வொரு நாளும், இந்தியர் ஒவ்வொருவரும் தங்களைப் பற்றி இப்படி நினைக்கவே செய்கிறார்கள்..!

## அலங்கோலங்கள்

நினைத்த நேரத்தில் நினைத்த பொருள் (அடிப்படைத் தேவைப் பொருள்) நினைத்த அளவு கிடைக்கிறதா? எத்தனை பேருக்குக் கிடைக்கிறது?.. உலகத்தைச் சுற்றி ஆகாய விமானங்கள் பறந்துகொண்டு இருக்கின்ற இந்த நாளில், — நினைத்த நேரத்தில் நினைத்த இடம் செல்ல ஒரு பழைய பேருந்து வண்டியாவது கிடைக்கிறதா? எத்தனை பேருக்குக் கிடைக்கிறது?..

தில்லி போன்ற பெருநகரங்களில், — அறுபது பேர் பயணம் செய்யக் கூடிய வண்டியில் அதைப்போல் மூன்று மடங்கு நான்கு மடங்குத் தொகையினர் தொற்றி ஏறி நெருக்கியடித்துக் கொண்டு, — மூர்ச்சை போடும் எல்லையில் பயணம் செய்வதைப் பார்க்கையில் இது மனிதச் சமுதாயத்தில் காண வேண்டிய காட்சி என்றா தோன்றுகிறது? இப்படி இடித்து நெருக்கி, எலும்புகள் நொறுங்கிப் பயணம் செய்வது மனிதத் தகுதிக்கே இழுக்கு என்பதை எத்தனை பேர் நினைக்கிறார்கள்? எத்தனை பேரால் அப்படி நினைக்க முடிகிறது?..

அன்றாடம் அடுக்குமாடிகள் எழுப்பிக் கொண்டு இருக்கிற இந்த நாட்டிலே, - அண்ட முடியாத அழுக்கிலும் ஒண்ட முடியாத குடிசையிலும் புரண்டு கிடக்கும் மக்கள் எத்தனைபேர்? கடத்தல் மன்னர்களுக்கும் விருதுகள் பெற்ற பணக்காரர்களுக்கும் ஊர்தோறும் பங்களாக்கள் (அரண்மனைகள்) இருக்கின்ற இந்த நாட்டிலே, — ரெயில் நிலையங்களிலும், சாக்கடை ஓரங்களிலும், உடைந்து கிழிந்த தகரங்களைத் தலைக்கு மேலே வைத்துக் கொண்டு வாழாமல் வாழும் மக்களின் தொகை எவ்வளவு?!..

அந்நிய நாடுகளோடு போட்டி போட்டுக்கொண்டு புதிய புதிய துணிகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கும் ஆலைகள் மலிந்த இந்த நாட்டிலே, — அழுக்கடைந்து கிழிந்த திரிகளையும் நிர்வாணத்தையுமே ஆடையாக அணிந்து திரியும் மக்கள் எத்தனை பேர்? புதுப்புதிய உணவுகள் கண்டு பிடிக்கப்பட்டு, — அவை, சிலரின் வீடுகளில் உள்ள குளிர்பதனப் பெட்டிகளிலும் குளுகுளு வசதி செய்யப்பட்ட சமையல் அறைகளிலும் அணியணியாக அடுக்கி வைக்கப்படுகின்ற இந்த ஏழை நாட்டிலே,- 'அன்னப் பால் காணாத ஏழைகட்கே நல்ல ஆவின் பால் எங்கே கிடைக்கும், அம்மா?' என்று கண்ணீர்க் குரல் எழுப்பித் திரியும் மக்கள் எத்தனை பேர்..?

## கேளாத குரல்கள்

இத்தனை — அலங்கோலங்களையும் கண்டு கண்டு நெஞ்சு பதைத்து, – “ அய்யன்மீர், அண்ணன்மீர், இந்த நிலையை மாற்றுங்கள், மாற்றுங்கள் ! ” என்று அழுது அழுது எழுதி, அழுது அழுது பேசி, ஓர் உயிரை அரை உயிராக்கிக் கொண்டு இருக்கின்ற என் போன்றவர்களின் குரல் யார் செவியிலாவது விழுகிறதா ? ‘ மனிதன் குறைந்தது 100 ஆண்டுக் காலமாவது வாழ்ந்திருக்க வேண்டும் ’ என்று பலகாலமாக விரும்பப்பட்டு வந்திருக்கிற இந்த நாட்டில்,- அந்தப் பஞ்சைகளும் அவர்களுக்காக அழுது அழுது தேயும் நாங்களும், – 20 வயதில், 25 வயதில், 40 வயதில், 45 வயதில் செத்துக் கொண்டு இருக்கிறோமே, – இது, இங்குள்ள புண்ணியர்களின் அல்லது வள்ளல்களின் அல்லது தலைவர்களின் கவனத்துக்கு வருகிறதா ?

நினைக்க நேரம் உள்ளவர்கள், கொடுக்க வசதி உள்ளவர்கள், செய்யச் சக்தி உள்ளவர்கள் என்று இருக்கும் சில பேர், – மற்ற மக்களை எல்லாம் பட்டியில் ஆடுகளும் தொழுவத்தில் மாடுகளும் ஆக்கி வைத்துக் கொண்டு, — சுகபோகத்தில் தலைநிமிர்ந்து உலவுகிறார்கள். இங்கே, இது, இன்று நேற்று வரலாறு அல்ல ; பல ஆயிரம் ஆண்டுகளாக இப்படித்தான் நடந்து வந்திருக்கிறது. அதனாலேதான்,-மக்கள், பேருந்துக்குள் நுழையும் இடத்தையே போர்க்களமாக்கிக் கொண்டிருக்கையில், – இந்த நாட்டு மந்திரி, ஆறுபேர் வசதியாக உட்காரக் கூடிய குளுகுளு காரில் தன்னந்தனியாகப் பயணம் செய்கிறான்.! ‘நாம் மட்டும் இப்ப்டித் தனிப் பிரிந்து தனி உயரத்தில், தனிச் சுகத்தில் உலா வரலாமா?’ என்கின்ற ஓர்மை, அவனுக்கும் அவனைப் போன்ற மற்ற வசதியாளிகளுக்கும் உண்டாகவே இல்லை!

## பயங்கர வாதமா?

'நாம் எல்லோரும் மனிதர்கள் என்றால், பலருக்கு இல்லாத சவுகரியம் ஒரு சிலருக்கு மட்டும் ஏன்? நாம் எல்லாரும் இந்தியர்கள் (அல்லது தமிழர்கள்) என்றால், ஒரு இந்தியனுக்கு இல்லாத வாய்ப்பும் வசதியும் மற்றொரு இந்தியனுக்கு (தமிழனுக்கு)க் கிடைக்கலாமா? பல கோடிப் பேருக்குக் குறைந்த அளவு வசதி உள்ள குடிசைகள் கூட இல்லாத நாட்டிலே, மந்திரிகளுக்கும் அலுவலகங்களுக்கும் அடுக்குமாடிக் கட்டிடங்களும் அங்கே குளுகுளு வசதிகளும் ஏன்? நாம் ஏழை நாட்டினர் என்றால், – நமது மக்களின் வாழ்க்கைக்கு வசதிகள் செய்துதர நம்மால் இயலவில்லை என்றால், — நமது ஆட்சி அலுவலகம் மரத்து நிழலிலேயே நடந்தால் என்ன? மக்களெல்லாம் மழையில் நனைந்து வெயிலில் உலரும்போது, அவர்களை ஆளும் அரசாங்கத்தின் அலுவலகமும் ஊழியர்களும் அப்படி நனைந்து காய்ந்தால் என்ன குடி முழுகிவிடும்? மக்களுக்கு வாழ்வு தர முடியாத, அவர்களின் வாழ்விலே நம்பிக்கை ஒளியைப் பாய்ச்ச முடியாத அலுவலக 'பைல்'கள் மழையில் நனைந்து அழிந்து போவதால் இங்கே புதிய கேடு என்ன வந்துவிடப் போகிறது?..'

இப்படி நினைக்கிறவனை, பேசுகிறவனை, எழுதுகிறவனை உள்ளே தள்ளிவிட முந்துகிற பெருமக்களே,– அவனுக்கு 'நக்சலைட்டு' என்றும் வேறுவிதமாகவும் பயங்கரப் ஃபெயர்கள் சூட்டுகின்ற பெரியோர்களே, — உங்களைப் பார்த்துத்தான் கேட்கிறேன் :

நாம் எல்லோரும் இந்தியர்கள் என்றால் நம் எல்லோருக்கும் ஒரேவிதமான வாழ்வு நிலையும் உரிமை நிலையும் இருக்க வேண்டும் என்று சொல்லுவதா பயங்கரவாதம்?

நாம் ஆறு அறிவு உடைய மனிதர்கள் என்றால், – நமது வாழ்வும் நடையும் மனிதத் தரத்துக்கு ஏற்ற முறையிலே அமைய வேண்டும் என்று சொல்லுவதா பயங்கரவாதம்? பெரும்பான்மையான மக்கள் கட்டிப்போட்ட ஆடுகள் போல் கிடக்க, ஒருசிலபேர் அவர்களின் வாழ்வையே உறிஞ்சி அவர்களைப் பஞ்சைகளாக்கிக் கொண்டு வருகின்ற மறைமுக "நர மாமிச பட்சணத்தனம்" இங்கே நடைபெறக் கூடாது என்று குமுறுவதா பயங்கர வாதம்?

## நாயினும் கீழாய்...

சற்றே நிமிர்ந்து நின்று நான் சொல்லுவதைக் கேளுங்கள்: இங்கே உள்ள நிலைமையோ, பெரும்பான்மையான மக்கள் மனிதத் தகுதியோடு வாழ்வதற்கு வாய்ப்பளிக்கவில்லை. இன்னமும் ஆட்டு மந்தைகள்போல் நெருக்கிக்கொண்டும், குச்சு நாய்கள்போல் குனிந்து கொண்டுமே பலபேர் வாழ வேண்டியுள்ளது. வலிய குரங்கு எல்லாவற்றையும் அள்ளிக்கொள்ள வலுவற்ற குரங்குகள் வயிற்றைப் பிசைந்துகொண்டு போவதைப் போலவே,– இங்கே, "வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகின்ற" நிலைமைதான் அன்றாட வாழ்வாக இருக்கிறது!..

யாரோ சிலர், எப்போதோ சிலகாலம், இப்படி ஒரு வாழ்வல்லாத வாழ்வுக்குள் வழுக்கி விழுந்துவிட்டால்,– 'அய்யோ' என்று அனுதாபப்படலாம்; பலகோடி மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக இந்தக் குழியிலே வீழ்ந்து,– அதையே வாழ்வு என்று நம்பி ஏற்று அப்படியே வாழ்ந்து வருகிறார்களே, அதைப் பார்த்து நம்முடைய ரத்தம் கொதிக்கவேண்டாமா? நம்முடைய ஈரல் கருகவேண்டாமா?

ஒரு நாயைச் சங்கிலியிலே கட்டிப் போட்டால், குரைத்துக் குதித்து அதை அறுத்துவிடத் திமிருகிறதே; ஒரு கிளியைக் கூண்டிலே அடைத்துப் போட்டால், அலகால் கொத்தியும் சிறகால் புடைத்தும் கூண்டை உடைத்துவிட முயல்கிறதே! மனிதப் பிராணிகள்,- சுதந்திரமாகச் சிந்திக்சவும் செயல்புரியவும் ஆற்றல் பெற்ற ஆறறிவுக்காரர்கள்,- தரக்குறைவு என்னும் சங்கிலியால் கட்டப்பட்டு, வசதிக் குறைவு என்னும் கூண்டிலே அடைபட்டுக் கிடக்கும்போது, அதைப் பொறுத்துக்கொண்டு, அந்த எல்லைக்குள்ளேயே முடங்கிச் சுருண்டு பிழைத்துக் கிடக்கப் பழகலாமா?

இப்படிச் சில கேள்விகளை எழுப்புகின்ற மனிதாபிமான உணர்வையும், மானுட மேம்பாட்டுச் சிந்தனையையும், பயங்கரவாதம் என்று பட்டம்சூட்டி ஒழித்துவிட முனைகிறோம் என்றால்,- அது, மனிதத்தனத்திலே நமக்கு உள்ள ஆர்வத்தையா காட்டுகிறது? "நானாகவும் தெரிந்துகொள்ள மாட்டேன்,- பிறர் எடுத்துச் சொன்னாலும் வாய்ப்பூட்டுப் போடுவேன்!" என்று சொல்லுகிற மக்களை, அடிமைத்தனத்துக்கும் மிடிமைத்தனத்துக்கும் பழகிவிட்ட அப்பிராணிகள் என்று சொல்லாமல், வீறுசான்ற மனிதர்கள் என்றா சொல்லுவது?

## என்னதான் செய்வது?

இந்த நாட்டின் பிரச்சினைகள்தீர என்ன செய்யலாம் என்ற கேள்வி எழும்போதெல்லாம்,- சிலர், 'உற்பத்தி பெருகவேண்டும்' என்கிறார்கள்; சிலர், 'மக்கள் தொகையைக் குறைக்கவேண்டும்' என்கிறார்கள்; சிலர், 'நாடு விரைவிலேயே தொழில்மயமாக வேண்டும்' என்கிறார்கள் (அதற்குள்ளேயே, 'கனரகத் தொழில் வேண்டுமா, சிறு குடிசைத் தொழில்களே பெருக வேண்டுமா?' என்கிற அடிதடி வேறு!)

இந்தச் சிந்தனைகளிலே பொருள் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், இவைகளாலேயே, நாம் நினைக்கும் இந்தியாவை உருவாக்கிவிட முடியாது; மக்களை எல்லாம் சாதனையாளர்களாகச் செய்து விடவும் முடியாது. ஏற்கனவே, 28 ஆண்டுகளாக இங்கே செயற்பட்டுள்ள இதுபோன்ற நடைமுறைகளால் நமது இந்தியச் சமுதாயம், சமநல நோக்கிலே கொஞ்சமும் எழுச்சி பெறவில்லை என்பதுதானே நமது அனுபவம்?..

இந்தச் செய்திகளை மக்களிடையே பரப்புவதைவிட அவர்கள் அனைவரும் மனிதர்கள், மனிதத் தரத்துடனே உரிமையுடனே வாழப் பிறந்தவர்கள் என்னும் எண்ணத்தை அவர்களிடம் வேகமாக எழுப்ப வேண்டும். சிலர் மேலேயும் பலர் கீழேயுமாக ஒரு சமுதாயம் இயங்குவது மானுட அடிப்படைக்கே விரோதம். அந்த நடைமுறை உடனேயே ஒழிக்கப்படவேண்டும் என்ற வீறு மக்களுக்கு ஏற்படவேண்டும். நாம் சம உரிமையும் சம வசதியும் உள்ளவர்களாக வாழாதவரை, நாம் எல்லோரும் ஒரே நாட்டுக்கு உரியவர்களாகமாட்டோம்; ஒருவரை ஒருவர் வீழ்த்தும் விலங்கு நடைதான் நமது நடையாக இருக்கும். கொஞ்சத்திலும் பஞ்சத்திலும் திருப்தி அடையும் கூனல் நடைதான் நமது நடையாக இருக்கும். எனவே - முதலாவதாக, நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற உணர்ச்சி மக்களுக்கு ஊட்டப்பட்டு,- அவர்களைப் பிடித்துவைத்திருக்கும் கட்டுப்பாட்டுக் கூண்டுகள் உடைக்கப்படவேண்டும். மனிதர்களைக் கூண்டில் அடைத்து, விலங்ககத்திலே வைத்துக் கொண்டு அதை ஒரு புண்ணியப் பூமி என்று சொல்லலாமா?

உடனேயே உறுப்பினர் ஆகுங்கள்

# அறிவியக்கம்

சிந்தனையைத் தட்டி எழுப்பும்

சீரார்ந்த மாத இதழ்

இரண்டாவது ஆண்டிலே

ஏறுநடை போடுகிறது!

(ஆண்டுக் கட்டணம் ரூ. 5-00)

தொடர்புகொள்ள :

பொதுச்செயலாளர்

## அறிவியக்கப் பேரவை

புதுப்பெருங்களத்தூர் — சென்னை - 63